# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

கீதாசார்யன் கண்ணன் குறும்புக் காரன் உலகில் வேறுயாரும் செய்யாத ஒரு வேலையை அவன் செய்தான். மனிதர்களுடைய பக்திகூட சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்று 3 வகைப்படும் என்று பகவத் கீதை 17 ஆம் அத்யாயம் 2 ஆம் சுலோகாத்திலே சொல்லி வைத்தான். அந்த ஸ்லோகம் வருமாறு:

**त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा।**
**सात्त्विकी राजसी चैव तामसी चेति तां श्रुणु॥**

எம்மதமும் சம்மதம் என்று சொல்லிக் கொண்டு முஸல்மான்களுடைய தர்கா முன்பும், கிறிஸ்துவர்களுடைய சர்ச் முன்பும் நின்று கொண்டு தொழுகை நடத்தும் சம்ப்ரதாய இந்து மக்களுக்குச் சாட்டையடி கொடுப்பது போல இதைச் சொல்லியிருக்கிறான். தெய்வத்துக்குத் தெய்வம் குணம் வேறுபடும். அதற்கேற்ப அந்தத் தெய்வத்தின் பக்திமானுடைய வாழ்க்கைவிதமும் மாறுபடும். 'பிஸ்மில்லா' என்று சொல்லி மாட்டை அறுத்துத் தின்னும் முஸல்மானுடைய பக்தியும், கண்ணாடிக் குவளையில் மதுவை ஊற்றி குவளையோடு குவளை மெல்ல இடித்துக் கொண்டு மது அருந்தும் கிறிஸ்துவனுடைய பக்தியும், ஸ்ரீமதே ராமானுஜாய நம: என்று கூறி நெற்றியில் திருமண் அணியும் வைணவருடைய பக்தியும் எல்லாம் ஒரே ரகம், எல்லாமே பக்திதான் என்று குழப்புகிறவர் களுக்கு, குத்தீட்டி போல இந்த ச்லோகத்தை கூறியிருக்கிறான் அந்த பார்த்தஸாரதி.

பிற மதஸ்தரிடம் சகிப்பு மனப்பான்மை யோடு இருக்க வேண்டும் என்ற பொருளில் எம்மதமும் சம்மதம் என்று சொன்னார்களா? அல்லது அந்த மதஸ்தர்களாகவே மாறி அவர்களுடைய சம்ப்ரதாயப்படி வணங்க வேண்டும் என்ற அர்த்தத்தில் சொன்னார்களா? கான்வென்ட்டில் பிள்ளைகளைச் சேர்க்கும் இந்து சம்ப்ரதாயக் குடும்பத்தினர் சில ஆண்டுக்களுக்குப்பின் தம் பிள்ளைகள் பைபிளை மனப்பாடம் செய்யத் தொடங்கும்போது நம்முடைய பெருமாள் தான் அவர்கள் சர்ச்சிலும் இருக்கிறார் என்று நொண்டிச் சமாதானம் கூறி, தம் குழந்தையின் மதமாற்றத்துக்கு சப்பைக் கட்டு கட்டுகிறார்கள். ஆத்மாவானது மாயா ப்ரக்ருதியை வென்று விரஜையைத் தாண்டி வைகுண்டம் போக வேண்டும் என்ற நோக்கோடு நம் பூர்வர்கள் நமக்கு பிறப்பித்த வைணவம் எங்கே? ஏதோ ஒரு சாமியை கும்பிட்டு உலகியல் வாழ்க்கையை வெற்றிகரமாய் நடத்தினால் போதும் என்ற மற்ற சம்ப்ரதாயங்கள் எங்கே?

இந்துமதத்தில் கூட உயிர்பலி வாங்கும் வழிபாடுகள் உண்டு. அவற்றை சாத்வீக லட்சியம் உள்ள பக்தன் தவிர்க்க வேண்டும் என்கிறான் கண்ணன். அதே அத்யாயத்தில் 12வது ஸ்லோகத்தில் கண்ணன்,

**अभिसंधाय तु फलं दम्भार्थमपि चैव यः।**
**इज्यते भरतश्रेष्ट त यज्ञं विद्धि राजसम्॥**

என்கிறான். பகட்டு ஆடம்பரம் ஆகிய நோக்கோடு செய்யப்படும் வழிபாடுகளை வெறுக்கிறான். காரியம் ஜெயித்தால் போதும் என்ற நோக்கத்தில் சுடுகாட்டு மாடன் வரை வணங்கத் தயாராகி விட்டார்கள் நம்

ஸத்சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள். பகவானுடைய தசாவதாரங் களில் பலராமன் பரசுராமன் என்ற அவதாரங்கள் மிகுந்த ரஜோ குணமானவை என்று அந்தக் காலத்தில் வைணவ உபாசகர்கள் தவிர்ப்பதுண்டு.

ஏகாந்தபக்தி நெறி என்பது வரவர செத்துக் கொண்டு வருகிறது. ராஜஸ குணத்தையும் தாமஸ குணத்தையும் தூண்டி விடக் கூடிய தெய்வங்களை வழிபடுவதில் நம் ஸத் சம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட தொடங்கி விட்டார்கள். எளிதில் பலன் கிடைக்கிறது என்பது அதற்கு அவர்கள் கூறும் வக்காலத்து. திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியில் பதிகங்களின் இறுதியில் காணப்படும் பலச்ருதி பாசுரங்களில் எம்பெருமான் நாராயணனை நம்பியவர்கள் உலகியலிலும் அரசனைப் போல் வாழ்ந்து ஸ்ரீவைகுண்டப்பேறும் பெறுவார்கள் என்று கூறியிருக்கிறார். அவருடைய சொந்த வாழ்க்கையே அதற்கு ஓர் உதாரணம். நாராயணனை வழிபடுபவர்கள் நடுத் தெருவில் திருவோடு ஏந்தி பிச்சையெடுத்து சீரழிவார்கள் என்று எந்த சாத்திரத்தில் சொல்லி இருக்கிறது? வைணவம் என்றால் என்னவென்று தெரியாதவர்களுக்குக் கூட பணத்தை வாரிக் கொடுக்கிறான் திருமலை ஸ்ரீநிவாசன் என்பதை உலகமே அறியுமே!

எம்பெருமான் அருளைப் பரிபூர்ண மாகப் பெற வேண்டுமானால் சிறிதளவாவது ஆசார்ய பக்தியும், ஸ்ரீவைஷ்ணவ பக்தியும் வேண்டும். அப்போதுதான் அவன் அருள் உடனே சித்திக்கும். திருமகளைத் துதித்து தேசிகர் பொன் மழை பெய்ய வைத்தாரே அது என்ன பொய்யா? பதிவ்ரதையாய் இருக்கும் பத்தினிக்கு கணவன் சகல க்ஷேமங்களையும் செய்வது போல வைணவ நெறியில் நிலையாக நிற்பவருக்கு பெருமாள் ஒரு குறையும் வைப்பதில்லை. ஸ்ரீராமானுஜர் காலத்தில் தம்மை அண்டிய ஆயிரக்கணக்கான சீடர்களுக்கும் உணவு முதலிய வசதிகளை கொடுத்து காப்பாற்றினார் என்று பார்க்கிறோம். அவரைத் தேடி அவர் காலடியில் பணம் வந்து கொட்டியது. எந்த துஷ்ட தெய்வத்தை வழிபட்டு அவர் அந்தப் பலன்களை அடைந்தார்? சோதனைக் காலத்திலும் விடாப்பிடியான விச்வாசம், வைணவ சம்ரதாயத்தில் ஊற்றமான ஈடுபாடு கொண்டவர்களை பெருமாள் கைவிடுவதில்லை. தான் பரதேசியாய் காட்டில் அலைந்தபோது கூட ராமன் சுக்ரீவனையும், விபீஷணனையும் அரசர்களாக்கிப் பார்த்தான். அவனுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் பகவான் தன் பக்தர்களை சீமான்களாக்கிப் பார்த்து மகிழ்ந்தானே தவிர அவர்களை ஆண்டியாக்கி அவலப் படுத்தியதாக வரலாறு இல்லை. குசேலனை கோடீஸ்வரனாக்க வில்லையா, பாண்டவர் களை சக்ரவர்த்திகளாக்கவில்லையா, தேவேந்திரனுக்கு இழந்த பதவியை மீட்டுத் தரவில்லையா, ப்ரஹ்லாதனை ராஜாவாக்கிப் பார்க்கவில்லையா? நவக்ரஹங்களே நாராயணனுடைய அருளால் தான் ராவணனுடைய இம்சையிலிருந்து தப்பின. ஆனால் இன்று வைணவர்கள் நவக்ரஹ சன்னதியை சுற்றிச் சுற்றி வருவதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்! கலியுகத்தில் உனக்கு புகழும் மேன்மையும் ஏற்படும் என்று துர்க்கைக்கு வரம் தந்தவன் கண்ணன். ஆனால் வைணச்சான்றோர் குடும்பத்தில் பிறந்தவர்கள் அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்பெறலாம் என்று பாதை மாறுகிறார்கள். ஸ்ரீவைஷ்ணவ பரம்பரையில் வந்த நம்முன்னோர்களுடைய கம்பீரம், அறிவு, ஆற்றல், செல்வம், மகிழ்வு, இவை மற்ற பாதைகளில் இதே அளவு கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா? சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.